**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 108/2024**

| | | | |
|---|---|---|---|
| | | **DEPOSITION OF WITNESS** | **PW.1** |
| NAME | யுவராஜ் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 04.02.2026.

**5 மற்றும் 6வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. இந்த வழக்கை மார்கபந்து என்பவரது வாரிசு சான்று கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ஆம் வாதி கலைவாணி எனது அம்மா. கலைவாணிக்கும், மார்கபந்துவிற்கும் 1983–ல் திருமணம் ஆனது தேதி, மாதம் தெரியாது. பரிமளா யார் என்றால் எனது அப்பாவின் இரண்டாவது மனைவி. பரிமளா மற்றும் மார்கபந்துவிற்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1993–ல்.

2. கலைவாணி மற்றும் மார்கபந்துவிற்கு பிறந்தவர்கள் எத்தனை பிள்ளைகள் என்றால் நான் மட்டும் தான். பரிமளா மற்றும் மார்கபந்துவிற்கு பிறந்தவர்கள் எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பிள்ளைகள், கார்த்திக், கந்தன் மற்றும் மகாலட்சுமி. மார்கபந்தின் அப்பா பெயர் மாசிலாமணி, அம்மா பெயர் மாணிக். அவர்கள் உயிரோடு உள்ளார்களா என்றால் நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார்கள். அவர்களது இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. கலைவாணி 13.03.2025–ல் காலமானார். நான் தற்போது 1ஆம் பிரதிவாதியை தவிர்த்து நானும், பிரதிவாதிகள் 2 முதல் 4 வரை உள்ளவர்களும் மார்கபந்துவின் வாரிசுகள் என வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் மற்றும் தாவாவில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல. நான் வட்டாட்சியரிடம் மனு கொடுத்தபோது உரிய ஆவணங்கள் மற்றும் உரிய விவரங்களை தெரிவிக்காததால் எனது மனு நிராகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.